வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அரசினுடைய நிதிநிலைமையைக் குறித்து அந்த படுக்கைகளினுடைய வசதிகளை அதிகரிப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

காரையூரில் கால்நடை மருத்துவமனை

*988—திரு. ஆலவயல் சுப்பையா :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருமயம் தொகுதி, காரையூரில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது வாய்ப்பில்லை.

திரு. ஆலவயல் சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னமராவதியை உள்ளடக்கிய அந்தப் பகுதி 43 ஊராட்சிகளைக் கொண்டது. பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரே ஒரு கால்நடை மருந்தகம்தான் இருக்கிறது. ஆகவே இன்னொரு கால்நடை மருந்தகத்தை அமைக்க அரசு விரைவில் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு உரிய தீர்மானத்தினை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைத்தால், அதுகுறித்து தக்க நேரத்தில் ஆய்வு செய்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கு ஜெர்மனியிலிருந்து உயர்தர மாடுகள் வாங்குதல்

*6601—திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேற்கு ஜெர்மனியிலிருந்து தமிழக அரசு உயர்தர மாடுகள் வாங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகள் எங்கு வழங்கப்பட்டு உள்ளன?

1990 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஐரோப்பிய பொருளாதார நாடுகளிலிருந்து உபரியாக உள்ள கால்நடைகளை இறக்குமதி செய்யும் பொருட்டு, முன்னோடித் திட்டத்தின் கீழ், தேசிய பால்வள வாரியத்தின் மூலமாக 250 'ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன்' கிடேரிகளும், 10 ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் காளைகளும் மேற்கு ஜெர்மனியிலிருந்து 1987 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டது. நீலகிரி மாவட்டத்தின் தட்ப வெப்ப நிலை மற்றும் வல்லுநர்களின் கருத்திற்கிணங்க 250 கிடேரிகள், நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. பத்து காளைகளை உதகமண்டலத்தில் உள்ள தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தைச் சேர்ந்த கருவூஜெர்ஸி பொலிகாளை நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மானியமாக பெறப்பட்டு இருக்கிற மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த அந்தக் காளைகள் இன்றைக்கு பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு இருந்தாலும், அவைகளை சரியான முறையிலே நம்முடைய தட்பவெப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ற வகையிலே பராமரிக்க முடியவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதற்காக அரசாங்கம் ஏதாவது திட்டத்தை வகுத்திருக்கிறதா? மேலும் பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்ற முறையிலே அதற்காக அரசு ஏதாவது சிறப்புத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காளைகளை எல்லாம் சரியான முறையிலே பராமரிக்க முடியவில்லை, இங்குள்ள சீதோஷ்ண நிலைக்கு ஒத்து வரவில்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் உதகமண்டலத்திலுள்ள கருவூ ஜெர்ஸி பொலி காளை நிலையத்தில் (Nucleus Jersey and Holstein Stud Farm) அந்தக் காளைகள் எல்லாம் உரைவிந்து தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் விவசாயிகளுக்கு 250 கிடேரிக் கன்றுகள் வழங்கப்பட்டதில் 188 ஹோல்ஸ் டீன் ஃப்ரீசியன் பசுக்களும், 125 கன்றுகளும் 43 கிடேரிகளும் இப்போது இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கால்நடைகள் எல்லாம் சரியாக பராமரிக்கப்படவில்லை என்பது உண்மைக்கு மாறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கலப்பு கால்நடை உற்பத்தியின் காரணமாக பால் உற்பத்தியானது எந்த அளவிற்கு அதிகமாயிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், ஐரோப்பிய நாடுகளில் இதைப் போன்று காளைமாடுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் பசுமாடுகளை அவர்கள் வெட்டுகிறார்கள். எனவே அவைகளை நாம் அதிகமாகப் பெறுவதற்கு அரசாங்கம் ஏதாவது கடிதப் போக்குவரத்து செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

10-05 மணி

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியைப் பற்றி எவ்வளவு பால் உற்பத்தி அடைந்திருக்கிறோம் என்ற கேள்வியை எழுப்பினார்கள். அதற்கு தனியாக வினா எழுப்பவும். அத்தோடு இதுபோன்ற திட்டத்தின் மூலமாக மேலும் கால்நடைகளை இறக்குமதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா என்ற கேள்வி யையும் எழுப்பியிருக்கிறார்கள். இதுகுறித்து அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) பெரியார் மாவட்டத்தில் அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளது குறித்து.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் அரிசி உரிமையாளர்கள் சங்கம், அரிசி வியாபாரிகள் சங்கம், கூலி அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் இவ்வாண்டு போதிய அளவிற்கு லெவி கொடுத்தும், அதிகாரிகள் சட்டத்திற்கு புறம்பாக லெவி வசூல் செய்வதாலும், வாகனங்களை நிறுத்தித் தொல்லை தருவ தாலும், வியாபாரிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது என்று கருதி, சந்தைகளுக்கு வருகின்ற நெல்லைக் கூட 21ஆம் தேதியி லிருந்து வராமல் செய்த காரணத்தால் இலட்சக்கணக்கான மக்கள் அரிசி கிடைக்காமல் அவதிப்படுகின்ற ஒரு நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு, உடனடியாக இந்த அரசு அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி, ஆவன செய்வதோடு, 21ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து அவர்கள்